**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 18/2025**

**வழக்கு சாட்சி PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முருகேசன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி | கணவர் பெயர் | : –––––– |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 60/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 23.03.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும், அவரது எனது ஊரைச் சேர்ந்தவர். புகார்தாரர் R.P.P. சண்முக சுந்தரத்தைத் தெரியும், அவரும் எனது ஊரைச் சேர்ந்தவர் தான். கடந்த 23.01.2025ம் தேதி மாலை சுமார் 07..00–8.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது வெளியே சண்டை போடும் சத்தம் கேட்டது. நான் எனது வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி R.P.P. சண்முக சுந்தரத்தின் வீட்டின் திண்ணையில் அரிவாளை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். ஆஜர் எதிரி, சண்முக சுந்தரத்தை பார்த்து தேவிடியா பையா என ஆபாசமாக திட்டினார். பிறகு ஆஜர் எதிரி அவர் வைத்திருந்த அரிவாளைக் கொண்டு சண்முக சுந்தரத்தை வெட்டியபோது சண்முக சுந்தரம் அவரது கைகளால் தடுத்ததன் பேரில் சண்முக சுந்தரத்தின் வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் அழகுராஜா, சுப்புலட்சுமி, மதன்குமார் ஆகியோர்கள் இருந்தார்கள். மேலும்

சண்முக சுந்தரம் குடும்பத்தாரும் அங்கு இருந்தார்கள். வெட்டுப்பட்டது சண்முக சுந்தரத்திற்கு இரத்தம் அதிகமாக வெளியேறியதால் நான், அழகுராஜா, மதன்ஆகியோர் ஒன்றுசேர்ந்து சண்முக சுந்தரத்தை பண்ணைக்காட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிக்சைக்கு அழைத்துச் சென்றோம். பிறகு அங்கு வந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**Counsel Christina Arputha Mary representing the accused present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW5 is closed.**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.03.23 18:18:11 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 18/2025**

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **மதன்குமார்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : முருகேசன் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 29/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 23.03.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் பண்ணைக்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். மேற்சொன்ன கையெழுத்தை நான் பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்தேன். சண்டை வழக்கு சம்பந்தமாக கையொப்பம் போட சொன்னதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன். 23.01.2025ம் இரவு சுமார் 07.45–08.00 மணியளவில் கடைக்கு சென்றுவிட்டு என் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தேன். அப்போது நான் சண்முக சுந்தரம் வீட்டைத் தாண்டி சென்றபோது சண்முக சுந்தரமும், ஆஜர் எதிரி ஆகிய இருவரும் சண்முக சுந்தரம் வீட்டின் திண்ணையில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். இருவரும் சத்தமாக பேசியதால் நான் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது எதிரி அவரது ஜர்க்கினுக்குள் பின்பகுதியில் மறைத்து வைத்திருந்த அரிவாளைக் கொண்டு சண்முகசுந்தரம் மீது வீசினார். அதில்

சண்முக சுந்தரத்திற்கு வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அப்போது அங்கு இருந்த நானும், அழகுராஜன், முருகேசன் ஆகியோர் எதிரி கருப்பசாமியை பிடித்து வெளியே இழுத்து சண்முக சுந்தரத்தை வீட்டில் வைத்து பூட்டிவிட்டோம். எதிரி சம்பவ இடத்தில் அரிவாளைக் கொண்டு அனைவரையும் மிரட்டிவிட்டு, பிறகு அங்கிருந்து சென்றவுடன் சண்முகசுந்தரத்தை நானும், முருகேசன், அழகுராஜன் ஆகியோர் பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் மேற்சொன்ன சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**Counsel Christina Arputha Mary representing the accused present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW6 is closed.**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.03.23 18:18:21 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.